போர்வாள்

...திராவிடர் வார வெளியீடு...

வாள் — திருவள்ளுவர் ஆண்டு 1979 பங்குனி 21 — வீச்சு 33

3-4-48 சனிக்கிழமை

ஆசிரியர்கள்:

ஏமாந்த பார்ப்பனீயம்!

உரையாடல் :

நமோ நமஹா! நமோ நமஹா

[சித்திர புத்திரன்]

ஜோசியர்:-ஓய் அப்பு அய்யரே! உமக்கேன்காணும் இப்போது கண்ணே தெரிவதில்லை. சிறிதுகூட நன்றி விசுவாசமில்லை.

அர்ச்சகர்:-என்னங்காணும் ரொம்ப ரொம்ப மேலே பேசுகிறீர். எதிலே ஓய் நன்றிவிசுவாசமில்லாததை என்னிடம் கண்டீர். நீர் எனக்கு ரொம்பவும் செய்துவிட்டாப்போலும், அதனால் நான் ஏதோ பலனடைந்து உமக்கு நன்றி காட்டவில்லை போலும்.

ஜோ:-ஆமாங்காணும், இப்போ சொல்லமாட்டீரோ, தினே தினே ஐம்பது அறுபது அர்ச்சகத்தில் உமக்கு கிடைக்கிறது. இதற்கு யார் காரணம் என்பதை மறந்துவிட்டீர். நன்றி மறக்காதீர்காணும்.

அர்:-ஓகோ! இதற்கென்ன காணும் உமக்கு நன்றி காட்டுவது, தினம் 50, 60, வருகிறது அதற்கு மேலும் சிலநாட்களில் திங்கள், வெள்ளி, சனி கிழமைகளுக்கு தினம் 100 ரூபாயும் வருகிறது, இதற்கு நீர் என்னங்காணும் தாறுவதி? முன்னே நடந்த சண்டையில், கூலிக்காரன் முதல் சகலருக்கும் வியாபாரத்தில் ஈடுபட்டவர்களுக்கு கொள்ளை அடிப்பதுபோல் பணம் சேர்ந்தது. அதிகாரிகளுக்கும் அதுபோலவே பங்கு வந்தது. அந்த மடைப்பயல்கள் இந்தக் கொள்ளைகளை யுத்தம் கொடுத்தது என்று எண்ணுமல் பகவான் கொடுத்தார் என்று நினைத்துக் கொண்டு கோயிலுக்கு வந்து விழுந்து கும்பிட்டுவிட்டு எனக்குக் கொடுத்துவிட்டு போகிறுன்கள். இதற்கு நீர் என்னங்காணும்!

ஜோ:-அட நன்றிகெட்ட ஜென்மமே! அவன்கள் தானுகவா வருகிறுன்கள். நானல்லவா அவன்கள் ஒவ்வொருவர் வீட்டிற்கும் சென்று ஒவ்வொருவனையும் பார்த்து, ஐயா! உமது ஜாதகத்திலே 8-ம் இடத்திலே சனிபார்க்கிறுன், 9-ம் இடத்திலே ராகு உச்சம் பெற்று இருக்கிறுன், 5-ம் இடத்திலே சுக்கிரனை வழி மறித்துக் கேது நிற்கிறுன் அதற்கு ஒரு வாரம் நவக்கிரக பூசை பண்ணவேண்டும், அஷ்டோத்திரம் செய்யவேண்டும், சகஸ்த்ரநாமம் பண்ணவேண்டும், எள்சாதம் படைக்கவேண்டும், மண்டலாபிஷேகம் பண்ணவேண்டும், கிரகசாந்தி செய்யவேண்டும், என்று எல்லாம் சொல்லி அந்த மடைப்பயல்களை கோவிலுக்கு நானல்லவா விரட்டி அடித்தேன். அதை நம்பித்தானே அந்த மடைப்பயல்களும் இப்படி எல்லாம் செய்தால் இன்னும் கொள்ளை கிடைக்கும் என்றும் கிடைக்காவிட்டாலும் வந்த பணமாவது போகாமல் இருக்கும் என்றும் கருதி கோவிலுக்கு ஓடிவந்து உமக்கு அழுதுவிட்டு வருகிறுன்கள். நான் இப்படிச் சொல்லாமல் வேறுவிதம் சொல்லி இருந்தால் உமக்கு இந்தக்கொள்ளை கிடைக்குமா? நாளை முதல் பாரும் இந்தக் கூட்டத்தை அப்படியே விஷ்ணு கோயிலுக்குத் திருப்பிவிடுகிறேன். இதிலிருந்தாவது என் சங்கதி தெரிந்துகொள்ளும்.

அர்:-ஜோசியர்வாள்! அப்படி ஒன்றும் செய்துவிடாதீர்கள். இந்த மாதம் முதல் மொத்தமாக உமக்கு மீ 20 ரூபா வீதம் கொடுத்துவருகிறேன். இது தவிர மொத்தத்தில் எனக்கு மீ 100 ரூபாய்க்குமேல் வந்தால் மேல்கொண்டு வருவதில் சரிபகுதி 50 பர்செண்டு உமக்குத் தந்துவிடுகிறேன். இதல்லாமல் மற்றும் கிரகசாந்தி செய்வதற்கு என்று ஒரு அணு வந்தாலும் அதில் அரை அணு உமக்குத் தந்துவிடுகிறேன். எப்படியாவது தினம் 10, 15, மடையன்களைப் பிடித்துச் சாந்திக்கும் கிரகதோஷத்திற்கும் தள்ளவேண்டியது உமது கடமை.

ஜோ:-அப்படிச் சொல்லுங்காணும் இப்போது தெரிந்ததா நம்ம சங்கதி? இனிப்பாரும் எத்தனை மடையன்களை அதுவும் ஜோடி ஜோடியாய்த் தம்பதி சகிதம் தள்ளி விடுகிறேன் என்பதை. இதிலே ஒரு விஷயமன்றே?

அர்:-அதென்ன?

ஜோ:-இனிமேல் நீர் சொ
வருவது சரி. இதுவரை
அடித்த கொள்ளைக்கு என
பங்கு எங்கே? உம்ம வீ
ரிபேர் செய்துவிட்டீர். கிட்டத்
ஆறு, ஏழாயிரம் ரூபாய் பாங்கி
போட்டிருக்கிறீர். உம்ம மூத்
மகளை டெல்லிக்குப் போ
பரிக்ஷைக்கு அனுப்பியிருக்கி
உம்ம தாசி தங்கத்துக்கு
ரூபாய் போல் நகை பண்
போட்டிருக்கிறீர். நீரும் தி
பிறந்தி ஒபினுகவே சாப்பிடுகி
லாலா கடையில் மாதம் 50, 60
பிரியாணி, வெளுத்து வாங்குகி
நீரும் நன்ருய் அகலத்தில் வ
திருக்கிறீர். இவையெல்லாம்
இரண்டு மூன்று வருஷ
தானே! ஏங்காணும் எ
தெரியாதென்று இருக்கிறீ
மொத்தமாக எனக்கு ஏத
கொடும். இல்லாவிட்டால் இ
சங்கதியெல்லாம் வெ
சொல்லி அத்தனை மடையன்
யும் விஷ்ணுகோவிலுக்குத் தி
விடுவேன். அங்கேயும் நவக்
சன்னதி வைத்தாய் விட்டது
யுமா?

அர்:-ஓய், ஓய், சத்தமாகப்
தீர்காணும், இதெல்லாம் உமக்
படித்தெரியும்?

ஜோ:-உம்ம இளைய சம்ச
இவைகளை எல்லாம் உங்க வீ
குத்தினம் வருகிறுரே பெரிய
செட்டி அவரிடம் சொல்லி
திருக்கிறுள். பெரியண்ண
இதை என்னிடம் சொன்
நான் அவனை இதையெ
வெளியில் சொல்ல வே
மென்று கேட்டுக்கொண்
நீர் சதா தாசி தங்கம் வீ
புரளுவதும், அவளுக்குக் கி
பிடித்து விடுவதும், பெரிய
செட்டி தினம் உம்ம வீ
வந்து புரளுவதும் யாருக்
தெரியாதுங்காணும்! நீர் என
சரியானபடி மரியாதை

(11-ம் பக்கம் பார்க்க)

அந்த எஃகு மனிதர்!

சோவியத் ரஷ்யாவின் தலைவர் ஸ்டாலின் பேசுவது குறைவு, செய்வது அதிகம். ஆழமான தண்ணீர் மெதுவாக ஓடிக்கொண்டிருக்கும் என்றோர் பழமொழி உண்டு. அந்த போன்று ஸ்டாலின் மௌனஞ் சாதித்து வருகிறார். ஆனால் அந்த சாந்தத்தில் பல இரகசியங்கள் உண்டென்பது உறுதி.

உலகம் முழுவதும ரஷ்யாவுக்கும் அமெரிக்காவுக்குமிடையே போர் மூளுமோ என்ற பேச்சு நடமாடுகிறது. அமெரிக்கத் தலைவர் ட்ரூமன் அதைப் பற்றிப் பேசாத நாளில்லை. பிரிட்டிஷ் பிரதமர் அட்லியோ அது பற்றிப் பல முறை பேசிவிட்டார். ஆனால் ஸ்டாலின்........?

அவர் வாய் திறக்கவில்லை. அமைதியாக, கற்சிலை போல் நிற்கிறார். சாந்தமே உருவாக இருக்கிறார். அந்த சாந்தத்தில் ஓர் சக்தி இருக்கிறது. அவரது மௌனத்தில் ஓர் பாடம் இருக்கிறது. ஆழமான நதி-ஆகவேதான சலசலப்பு இல்லை!

ஸ்டாலின் என்றால் எஃகு என்று பொருள். பெயர் மட்டுமல்ல, அவருடைய உள்ளமே எஃகு போன்று எதற்கும் அசையாத உறுதி படைத்தது என்பதை யாவரும் மறுக்க முடியாது.

ந்த எஃகு மனிதர் கோரி(Gori) ற பட்டினத்தில் 1879-ம் வரு பிறந்தவராகும். இவரது முழுப் ர் ஜோஸப் விஸரினைப் ஸ்டா என்பதாகும். டிஜுகாச்சு என்ற இடத்திலுள்ள ஒரு சாய குடும்பத்தைச் சேர்ந்தவம் இவர்.

ங்குள்ள விவசாயிகளிடையே து தகப்பனார் செருப்பு வியா ம் செய்துவந்தார். ஸ்டாலினும் ருப்பு தைக்கும் வேலையில் பத்தில் அமர்ந்தார். ரஷ்ய சாயிகளுக்கும் ரஷிய ஆலைத் ழிலாளிகளுக்குமிடையே இவ வாழ்க்கை நிலவியது.

க்காலத்தில் மூன்றும் அலெக் தர் சக்ரவர்த்தி ஏகாதிபத்தி த வலியுறுத்தி போதனைகள் வதற்கு ஒரு புரோகிதர்கள் ிய கூட்டத்தை நிர்மாணித் . இதில் மதம், கடவுள் ஆகி கள் சம்பந்தமான சாதனப் ரங்கள் நடத்தப்படலாயின. ிதத்தைப் பழக்குவதற்கு பல கல்வி நிலையங்களை அலக்ஸாந்தர் ஸ்தாபித்தான்.

ஸ்டாலின் தனது 15-வது வயதில் மேற்கூறிய கல்விநிலயமொன்றில் சேர்ந்தார். ஸ்டாலின் எழுதப்படிக்கத் தெரிந்தவுடன் மார்க்ஸ் சித்தாந்தத்தின் மொழி பெயர்ப்பு ஒன்று அவருடைய கையில் எப்படியோ கிடைத்துவிட்டது. இந்தப் புத்தகம் அவரது கவனமனைத்தையும் கவர்ந்துவிட்டது. இந்த நூலிலுள்ள விஷயங்களைத் தெளிவாக விளங்கிக்கொண்டார். இதன் போதனைகளை, இவர், கிரியாம்சையில் கொண்டுவரமுற்பட்டார். தன்சகாக்களிடம் இந்நூலின் தத்துவங்களை விளக்கிக்கூறவும் அதை போதிக்கவும் முன் வந்தார்.

இதை கல்வி நிலய அதிகாரிகள் அறிந்தவுடன் அவரை பள்ளியிலிருந்து விலக்கி விட்டனர். அப்போது அவருக்கு வயது 19. ஸ்டாலின் ஜார்ஜியா நகரின் தலைப் பட்டணமாகிய டைபிளிஸ் என்ற இடத்திற்குச் சென்று செருப்பு தைக்கும் தொழிலைச் செய்து கொண்டேயிருந்தார். அங்குள்ள ரயில்வே தொழிலாளர்க ளெல்லோரையும் இவர் ஒன்று சேர்த்தார். இவரது தைரியத்தையும் சாதுர்யத்தையும் கண்டு அந்தக் காலத்து ரஷ்யத் தொழிலாளர் கட்சியார் மிக வியந்தனர்.

ஸ்டாலின் மனோதைரியத்துடன் தனது கொள்கையைப் பிரசாரம் செய்து கொண்டே வந்தார். இவரது திறமையைக் கண்ட தொழிலாளர் சமூகம் இவரை "சமதர்ம ஜனநாயகத்துவ கட்சி" க்கு ஓர் அங்கத்தினராகத் தேர்ந்தெடுத்தனர். இந்தக் காலங்களில், போலிசார், கல்லூரிகளில் படித்துவந்த தீவிர வாலிபர்களைக் கண்காணிப்பதில் முழு கவனஞ் செலுத்தியதால் அவரது இயற்கையான மனோ உற்சாகத்தோடு அவர், தம் வேலைகளைத் தங்கு தடையின்றி செய்து வந்தார். அதன் பயனாக அவர் 1902-ம் ஆண்டில் சிறைச்சாலைக்கு அனுப்பப்பட்டார். பிறகு ஸைபீரியாவுக்கு நாடு கடத்தப்பட்டார்.

1903-ம் வருடம் சமதர்ம ஜனநாயகத்துவ கட்சியிலிருந்து லெனின் விலகி போல்ஷ்விக் கட்சியை தனியாக ஸ்தாபித்தார். ஜோசப் ஸ்டாலின் உடனே இவ்வபிப்பிராயத்தை மனமார ஆதரித்து விவசாயிகளையும், ஆலைத் தொழிலாளர்களையும், ஒன்று படுத்த விழைந்தார் ஆகையால், இவ்வியக்கம் விவசாயிகளிடையேயும், ஆலைத் தொழிலாளர்களிடையேயும்தான் இருக்க வேண்டுமென்ற விதி ஏற்படுத்தப் பட்டது. படித்த கூட்டத்தினர் தொழிலாளர்களின் நிலைகளை சரிவர அறிய முடியாதென திட்டம் வகுக்கப்பட்டது. படித்த கூட்டத்தினரால், கைத்தொழில்களில் முதலாளித்துவம்தான் ஏற்படுமென மேற்கண்ட திட்டம் கூறியது. ஜெர்மனி, இங்கிலாந்து முதலிய தேசங்கள் இம்மாதிரி, படித்த கூட்டத்தில் நம்பிக்கை வைத்திருப்பதால்தான், அந்நாட்டு தொழிலாளர்களின் விடுதலை சீக்கிரம் கிடைக்கவில்லையென இத்திட்டத்தின் மூலம் வரையறுத்துக் கூறப்பட்டது.

லெனினது இப்புது திட்டம் எங்கும் பரவிவரும் சமயத்தில், ஸ்டாலின் சைபீரியாவிலிருந்து தப்பி ஓடிவந்து, டைபிளீசிலிருந்தார்.

அதே சமயம் அவர் காக்கேஸன் யூனியன் கமிட்டிக்கு ஒரு அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இச்சமயத்தில்தான் அவர் "தொழிலாளரின் போராட்டம்" என்ற ஒரு புத்தகத்தைப் பிரசுரித்தார். இதே போது தென் ரஷியாவில் லெனினுடைய புது திட்டப்படி அமைந்த தொழிலாளர் கட்சியை ஸ்டாலின் தலைமை பூண்டு நடத்தினார்.

செயின்ட் பீட்டர்ஸ் பர்க்கில் 1905-ம் ஆண்டில் இவர் அந்தரங்கமாகப் பல புரட்சி வேலைகளைச் செய்து வந்தார். இரத்தம் சிந்த வேண்டிய நெருக்கடியான நிலைமைகள் ஏற்படுமென்று படித்த கூட்டத்தினர் கண்டவுடன், தொழிலாளர் கட்சியிலிருந்து அவர்கள் விலகினர். ஆகவே, கட்சியின் பூரண அதிகாரமும் உழைப்பாளிகளின் கையில் வீழ்ந்தது. இப்புது போராட்டத்தைத் தொடர்ந்து நடத்துவதற்கு பணம் தேவையாயிருந்தது.

ஸ்டாலின் இச் சமயத்தில் துணிச்சலான பல காரியங்களைச் செய்துமுடித்தார். திருட்டுத்தனமாக, தாமே அச்சிட்டு கள்ளநோட்டுகளை வெளியிட்டார். நிதி சேகரிக்க பணம் திருடினார். லெனினால் அனுப்பப்பட்ட வெடிகுண்டுகளின் உதவியால், ஸ்டாலின் ஒரு தொழிலாளர் கூட்டத்தை நடத்திச் சென்று, டைபிளிஸ் ஸ்டேட் பாங்கில் கொள்ளையிட்டார். இதில் 50 பேர் உயிர்துறந்தனர்.

1908-ம் ஆண்டில் ஸ்டாலின் மீண்டும் கைதியாக்கப்பட்டு, நாடு கடத்தப்பட்டார். ஒரு வருடத்திற்குள்ளாக, இவர் எப்படியோ தப்பி **கோபா** என்ற பெயருடன் வெளி வந்தார். ஆனால், கோபா என்ற பெயர்கூட ரஷ்யப் போலீஸ் வர்க்கத்தினரை அதிக நாள் ஏமாற்ற முடியவில்லை. இவர் ரஷிய நாட்டின் கடுங்குளிர்பிடித்த சைபீரியா என்ற இடத்திற்கு மறுபடியும் நாடு கடத்தப்பட்டார். ஆனால், இந்த நிர்ப்பந்தம் அவரை, மீண்டும் தப்பியோடிவரத்தான் இடங்கொடுத்தது.

மாரிக்காலத்தில் ஒரு நாள், ஸ்டாலின், குளிர் பிரதேசங்கள் வழியாக நெடுந்தூரம் நடந்து, தனது ஆரம்ப இடத்திற்கு வந்துவிட்டார். இச் சமயத்தில், அவர் அதிக பயங்கரமானவராக அரசியலாராலும், இதரர்களாலும் கருதப்பட்டார். 1913-ம் ஆண்டு வரை இவர், போலீஸ் அதிகாரிகளோடு, "கண்ணாமூச்சி" விளையாடி வந்தார். பல தடவை, இவர் கைதியாக்கப்பட்டார். ஆனால், அத்தனை தடவைகளிலும் எப்படியோ தப்பிச் சென்றுவிடுவார். இந்த நெருக்கடியான நாட்களிலும், இவர் தனது கொள்கையைத் திண்ணைப்பிரசார மூலமாகத் தொடர்ந்து நடத்திவந்தார்.

"பாட்டாளியும் சிப்பாயும்," "பாட்டாளியின் வழி," "உழைப்பாளி" முதலிய புத்தகங்களை இவர் வெளியிட்டார். லெனின், அதிக தூரமான இடத்திலிருந்து தனது புரட்சி வேலையைச் செய்து வந்தார். ஆனால் ஸ்டாலின், செயின்ட் பீட்டர்ஸ் பர்க்கிலுள்ள பிரசுராலயத்தையே தனது உபயோகத்திற்குப் பயன்படுத்திக் கொண்டார்.

ஸ்டாலினைப் போன்று இதர போல்ஷ்விக் தலைவர்கள் அதிகக் கஷ்டப்படவில்லை. இவருக்கு ஏற்பட்ட தொல்லை, கொடூரம், நாடு கடத்தல் முதலியவைகள் மிக்க கொடூரமானவை!

ஏகாதிபத்திய வெறி கொண்டோர்களின் மத்தியில் தைரிய மனப்பான்மையுடன் சலியாது உழைத்தவர்களில் ஸ்டாலின்தான் மிகச் சிறந்தவர்!

"மக்கள் சுதந்தரமாக வாழ வேண்டும்" என்ற ஆப்த வாக்கியம் இவரது நாவில் தொனித்தது. தனது முழு அறிவையும் தொழிலாளர் நன்மைக்கே பயன்படுத்தினார் ஸ்டாலின்!

1913-ம் வருடத்தில், இவர் மீண்டும் அதிகார வர்க்கத்தினரால் கைதியாக்கப்பட்டார். உழைப்பாளிகள் மத்தியில் வீரர் ஸ்டாலின், உதய சூரியன்போல் விளங்கினார். இவரது போராட்டச்சுடர் எங்கும் தன் ஒளி வீசி நின்றது. பலம் பொருந்திய ஜார் கூட இவரை அடக்கவோ, வெல்லவோ முடியவில்லை.

1913-ல் நாடு கடத்
பட்ட இவர், நான்கு வரு
சென்ற பிறகு—அதாவது, 191
பட்குரா கிரட்டிற்கு வந்
கெரன்ஸ்க்கி என்பவரால் அ
யல் கைதிகளுக்கெல்லாம் மன்
புக் கொடுக்கப்பட்டது. ஸ்ட
னும் விடுவிக்கப் பட்டார். ஸ்
லின் விடுதலையானவுடன், உ
பாளிகள், சிப்பாய்கள், விவச
கள் முதலியோர்களிடையே
சிறு கூட்டங்கள் ஏற்படுத்தி த
பிரசாரத்தை தீவிரமாக நடத்தி
தார்.

ஜெர்மானியரின் துணையுட
லெனின் ரஷியாவிற்குள் மீண்
புகுந்தவுடன், ஸ்டாலினை
தனது திட்டத்திற்குத் தயார
ஒருகோஷ்டியின் தலைமை
இருப்பதைக் கண்டார்; பெ
களிப்புக்கொண்டார்.

இதர போல்ஷ்விக் தலைவர்
நெருப்புப் பொறி பறக்கும் பிர
கங்களிலீடுபட்டிருந்தபோது, ஸ்
லின் நடைமுறையில் தனது வே
யில் தீவிரமாக ஈடுபட்டு தொழி
ளர் சமூகத்தின் கௌரவம், உ
வுக்காக வேலைசெய்து வந்த
இவர் பல ஜாதியார்களிடை
அவர்கள் பண்புகளையும் இயல்
யும் எதிர்க்காது மிக சாதுர்யம
வேலை செய்து வந்தார்.

ஸ்டாலினுடைய புத்தி அதி
சண்யமானது. அவர் சாகசமு
சாதுர்யமும்தான் இன்று ர
நாட்டை உயர்ந்த நிலையில் வை
திருக்கிறது.

சோவியத் புரட்சிக்குப் பி
1920-ம் ஆண்டிலிருந்து 192
ஆண்டுவரை, தெற்குப் பிரதேச
ளில் ராங்கல் என்பாரும், மேற்
பிரதேசங்களில் டென்கின்
பாரும் இவரை எதிர்த்தனர்.
சமயத்தில் ஸ்டாலின், அவர்க
எதிர்ப்பை சமாளிக்கும் பொ
பில் தீவிரமாக ஈடுபட்டார்.

இதே சமயத்தில் லெனி
அதிக களைப்புற்று மரணமெய்
நிலைக்கு வந்து விட்டார். என
ஸ்டாலினுக்கும், டிராட்ஸ்கி
இடையே தலைவர் பதவி
போராட்ட மேற்பட்டது.
களிருவருக்கும் இடையே
கட்சிகள் இருந்தன.

"மக்களை ஒன்று படுத்தி
முறையிலே வெற்றியைக்காண்

வேண்டு”மெனக் கூறினார், ஸ்டா லின்!

ட்ராட்ஸ்கி, தீவிரபோக்கு கொ ண்டவர். தலைதெறிக்கும் வேகத் தில் கொள்கையை நடத்திச்செல்ல வேண்டுமென்றார் அவர். லெனின் இறந்தவுடன் “சிகப்புப் படை”க்குத் தலைவர்த்தராக, தான் தான் வர வேண்டுமெனப் போராடினார் ட்ராட்ஸ்கி!

ஸ்டாலினே, பயிற்சி அளிக்கப் பட்ட தொழிலாளர் மீது நம்பிக்கை வைத்திருந்தார். ஆகவே, இறுதி யில் ஸ்டாலின்தான் வென்றார். ட்ராட்ஸ்கி நாட்டைவிட்டு ஓடிவிட் டார். ஸ்டாலின் எதிரியில்லாத வராக பத்து லட்சம் வாக்குரி மையாளர்களால் தேர்ந்தெடுக்கப் பட்டார்.

அன்று முதல் இன்றுவரை சோவியத் ரஷ்யாவின் மகத்தான தலைமையை ஏற்று அதைச் சிறப் பான முறையில் நிர்வகித்து வருகி றார் ஸ்டாலின். இதுவரை உலகம் கண்டறியாத ஒரு புத்தம் புது சமு தாயத்தை உருவாக்கிக் கொடுத்தார் லெனின். ஆனால் அந்தச் சமுதா யம் நன்றாக வளர்ந்து, சிறந்து, மற்ற நாட்டார் முன்னிலையில் செம் மாந்து நின்று, பீடு நடை நடக்கும் நிலையில் அவர் உயிருடன் இல்லை. தவழ்ம் குழந்தை என இருந்த சோவியத் ரஷ்யாவை முறுக்கு மீசை வாலிபனை வளர்த்த பெருமை ஸ்டாலினுக்கே உண்டு.

அடுத்தடுத்து வகுத்த பல ஐந்து ஆண்டுத் திட்டங்களால், ஸ்டாலின், ரஷ்யாவை யாராலும் அசைக்க முடியாத மிக உயர்ந்த நிலைக்கு இழுத்துக் கொண்டு போய் விட் டார். அண்மையில் நடந்த உலகப் போரில் ரஷ்யாவின் வல்லமையை, படை பலத்தையும், மக்கள் ஒற்றுமையையும், செஞ்சேனையின் வீரத்தையும் கண்டு பல வல்லரசு களும் திகைத்தன; பிரிட்டன் அண்டது அமெரிக்கா மருண்டது; ஜெர்மனியோ சோவியத் இயந்தி ரத்தை எளிதில் நொறுக்கிவிடலாம் என்று கனவு கண்டது. இரண்டே மாதத்தில் ரஷ்யாவைத் தீர்த்துக் கட்டி விடுவேன் என்று ஹிட்லர் ஆர்ப்பாட்டம் புரிந்தான். ஆனால், முடிவில், அந்த சோவியத் இயந்திரத் தில்தான் அவன் சிக்கிச் சிதைந் தான்.

ஸ்டாலின் என்ன சொல்கிறார், என்ன செய்கிறார்; எப்படி தன் நாட்டை நடத்திச் செல்கிறார் என் பதையே, உலகம் வேறு எந்தப் பிரச்சினையை விட இன்று மிக முக்கியமாக எண்ணுகிறது. ராஜ தந்திரத்திலும் ஸ்டாலின் இணை யற்றவராய் இருக்கக் கண்டு மேற் கத்திய வல்லரசுகள் திகைப்பும் நடுக்கமும் கொள்கின்றன.

மறுபடியும் போர்மேகங்கள் உலகம் எனும் வானில் வட்டமிடத் தொடங்கியுள்ள இந்நாளில், உலக அரசியல் அரங்கில், ஸ்டாலின், மிகமுக்கியமான கேந்திர ஸ்தானத் தில் நிற்கிறார் என்பதை யாரும் மறுக்க முடியாது.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சொன்னாலும் முடியும். சாமி-இர கம் என்று சொன்னால் அவர்கள் சம்மதிக்காவிட்டாலும் அவர்கள் அவயவங்கள் முடங்கிவிடும். நம்மிட பெரியவாளைப் பயித்தியக்காரர் என்று எண்ணியிருக்கிறாய்? சூத் திராள் என்றால் அசல் சூத்திரான் தாங்காணும்.

ஜோ:-சரி! நமஸ்காரம். போய் வருகிறேன். நாளைக்குத்தானே.

அ:-ஆம். நாளைக்குத்தான். நாளைக்குத்தான். நீர் மாத்திரம் இதையெல்லாம் வெளியில் சொல்லிவிடாதேயும்.

ஜோ:-இல்லை. இல்லை. தங்கம்மா ளைத் தவிர மற்றதெல்லாம் முன் னயே மறந்துவிட்டேன்.

அ:-சரி, சரி.

நமோ நமஹா! நமோ நமஹா:

திராவிடஸ்தான் வேண்டாமா?

வேண்டாம் என்கிறார் கம்யூனிஸ்ட் நண்பர். அதற்குத் தக்க மறுப்புரை வழங்குகிறார் மா. இளஞ் செழியன். இருவருக்கும் இடையே நிகழ்ந்த எழுத்துப் போர் இப் புத்தகம்.

விலை அணா 8
தபாலில் அணா 9

ஈரோட்டுப் பாதை

தீட்டியவர்: மா. இளஞ்செழியன் B. A. (Hons)

அலைகடலென எழுந்த எதிர்ப்புக்கிடையே சுயமரியாதை இயக்கம் மடமடவென வளர்ந்த விதத்தைச் சுவைபடக் கூறுகிறது “ஈரோட்டுப் பாதை.”

விலை அணா 8
தபாலில் அணா 9

ஒரு ரூபாய் அனுப்புவோர்க்கு இரண்டு புத்த கங்களும் தபால் செலவின்றி அனுப்பப்படும்.

பகுத்தறிவுப் பாசறை

147, பவழக்காரத் தெரு, சென்னை 1.

போர்வாள்

3—4—45 சனிக்கிழமை

சேற்றிலே முளைத்த செந்தாமரை

சேறு, காண்பவர் எவர்க்கும் அருவருப்பையே தரும். ஆனால் அதில் முளைத்து எழுந்து, மெல்லிய இதழ் விரித்து, புன்சிரிப்புடன் காட்சி தரும் அந்த அழகிய செந்தாமரையைக் கண்டால் எவர் உள்ளத்திலும் களிப்பு கூத்தாடத்தான் செய்யும். சேறு என்கிறபோது வெறுப்பும், அதிலே தோன்றும் செந்தாமரை என்கிறபோது களிப்பும் பிறப்பது இயற்கை.

கலை உணர்ச்சியை உள்ளத்தில் எழுப்பும் செந்தாமரை வெறுப்புணர்ச்சியை ஊட்டும் சேற்றிலேதான் முளைக்கிறது. அதுவேபோல சில நன்மைகள் பல தீமைகளினின்றும் பிறப்பதுண்டு. சில நல்லோர், தீயோர் நிறைந்த சூழ்நிலையில் உருவாவதும் உண்டு. பிறர் உயிரைக் குடிக்கும் உலுத்தர்கள் குடிசையிலே உலகை உய்விக்க வந்த உத்தமர்கள் தோன்றுவதையும் வரலாற்றிலே கண்டிருக்கிறோம். மூட நம்பிக்கையை வளர்க்கும் ஒரு பாதிரியின் மகன், சடங்கு சம்பிரதாயம் எனும் கோட்டை கொத்தளங்களை இடித்துத் தரை மட்டமாக்கவந்த **இங்கர்சாலாக** இருந்ததையும், "கறுப்பு நிறத்தவரா—வெறுத்து ஒதுக்கிடு அவர்களை" என்று கூவிவந்த அமெரிக்க மக்களிடையே அந்த நீக்ரோக்களின் அடிமைத் தனத்தையே ஒழிக்க வந்த ஓர் **ஆபிரகாம் லிங்கன்** தோன்றியதையும், பட்டை நாமப் பாகவதருக்கு தினம் எட்டு வேளை விருந்து வைத்து ஹரிகதா காலட்சேபம் கேட்டுவந்த ஒரு வைதீக இந்துவுக்கு வைதீகத்தையும் இந்து வெறியையும் வேரோடு கல்லியெறியவந்த ஒரு **பெரியார் இராமசாமி** பிறந்ததையும் நாம் அறிந்திருக்கிறோம். ஆகவே சேற்றிலே செந்தாமரை முளைப்பது வாழ்க்கையிலே நாம் காணும் ஓர் உண்மைகூடத்தான்.

செந்தாமரைகள் சேற்றிலிருந்து பிறந்தன என்பதற்காக நாம் அவற்றை வெறுத்துவிடுவதுமில்லை. சேறு, செந்தாமரையைத் தருகிறது என்ற காரணத்திற்காக அதை நாம் போற்றுவதுமில்லை. இரண்டிற்கும் தனித்தனியே உள்ள தன்மை, குணம், பண்பு, இத்தன்மைத்து என்பதை அறிந்து அதற்கேற்பவே அவற்றை நாம் தூற்றவோ போற்றவோ செய்கிறோம். ஏனெனில் சேறு—செந்தாமரை இரண்டும் ஒன்றுடன் ஒன்று இணைந்திருந்தாலும் அவற்றிற்கு நடுவே உள்ள இடைவெளி மிக அதிகம் — பண்பாட்டைப் பொறுத்தவரையில் !

சென்னை சட்டசபை காங்கிரஸ் கட்சியின் தலைவர் தேர்தல் ஒரு சேறு! ஆனால் இந்த ஆண்டிலே அந்தச் சேற்றிலே ஒரு செந்தாமரை முளைத்தது. கண்டோம்—களித்தோம்—களிப்பை மொண்டு தருகிறோம் உமக்கும், நீவிரும் களிக்க.

ஒவ்வோர் ஆண்டும் சென்னை சட்டசபையிலே பூகம்பம் ஏற்பட்டு

காங்கிரஸ் மந்திரி சபை எ
கட்டிடம் கலகலத்துக் கீழே வி
வது வழக்கமாகிவிட்டது. மு
ஆண்டு, அன்பர் ஆச்சாரியார்,
டிடம் அமைக்க எண்
"பிளான்" போட்டு, "எஞ்சி
ரிங்" சாமான்களோடு வந்தா
பயனில்லை. கட்டிட நிர்மா
கர்த்தா என்ற பதவி முதிய
பிரகாசம்காருவிடம் தரப்பட்டுவி
டது ஓர் ஆண்டு, பிரகா
மாளிகை நிலைத்தது. ஆனால்
ஆண்டுதான் நிலைத்தது. அடு
ஆண்டுத் தொடக்கத்திலேயே
சடசடவெனச் சரிந்து வீழ்ந்த
அத்துடன் பிரகாசம்காருவின் ம
மும் உடைந்து வீழ்ந்தது — மா
கையை விட்டு வெளியேறிவி
டார். பதவி ஓமாந்தூர் ராமசா
யாரிடம் கைமாறிச் சென்ற
பிரதமர் ரெட்டியார் எழுப்பிய
திரி சபை மாளிகையையும் தக
தெறிய இந்த ஆண்டு முய
நடைபெற்றது. பிரதமர் பதவி
டாக்டர் சுப்பராயனோ அல்ல
பிரகாசமோ அல்லது இருவரு
கவோ தட்டிப் பறிக்க தம்ம
ஆனமட்டும் முயன்றனர். முய
முறிந்தது. ரெட்டியார் கட்டி
நிலைத்தது.

இது போல ஆண்டுக்காண்
அமைச்சர் குழுவும் முதல் அமை
சரும் மாறுவது என்று சொன்
ஒரு நாட்டின் வீழ்ச்சிக்கு இ
விடச் சான்று வேறு தே
இல்லை. மந்திரிகளாக இன்
இருப்போர் அடுத்த ஆண்டும்
வருவோமா மாட்டோமா என்
ஆரூடம் கணிப்பதிலேயே
நேரத்தையும் நினைப்பையும் செ
விடுவரே தவிர நாடாள்வதி
அவர்கள் சிந்தை அவ்வளவா
பதியாது. அதுபோலவே அடு
ஆண்டு கட்சித் தேர்தலில் அமை
சர்களாக வர இருப்போர்--வரமு
யும் என்று எண்ணும் எம். எ
ஏ.க்கள் அதற்கான படை பல
திரட்டுவதிலேயே தம் சிந்தை மு
வதையும் செலவிடுவரே த
ஊர் ஆளும் முறைகளைச் செப்ப
டுவதுபற்றிய ஊக்கமோ உற்
கமோ கொள்ளமாட்டார்கள்.

மந்திரிகள், அடுத்த ஆண்
தம் கட்சித் தோழர்கள் தம்மை
தேர்ந்தெடுக்க என்னென்
செய்ய வேண்டுமோ அவற்றை

சய்துகொண்டிருக்க, எம். எல்.
க்கள் தற்போதுள்ள மந்திரிகளை
ரிப்பவர்களானால் ஆதரவுப்
ட்டாளம் திரட்டுவதும் எதிர்ப்ப
ர்களானல் ஒழிப்புப் படை
ரிசை அமைப்பதும் என்ற இந்
ப்பணியிலே இருந்து விடுவார்க
ானல், இத்தகைய எம். எல். ஏ.க்
ளேயும் மந்திரி சபையையும்கொ
டே ஒரு கட்சியிடம் ஒரு நாடு
ப்படைக்கப்பட்டு விடுமானல்,
ந்த நாட்டாட்சி நல்லாட்சியாய்
ாது என்பதை அறிய வரலாறு
வை யில்லை, சாதாரணப்
து அறிவு போதும்.

சென்னை சட்டசபை காங்கிரஸ்
ட்சி சென்ற மூன்ருண்டுகளாக
ருந்து வரும் நிலை இத்தன்மைய
தான். பிரகாசம் —காமராஜ்—
ஆர் கோஷ்டிகள் என்ற 'திரி
ாண மலை' யிலே சிக்கிக்
ாண்ட சென்னை காங்கிரஸ்
ம். எல். ஏ.க்களும் மந்திரி சபை
ம் இந்த மூன்று மூலைகளிலேயும்
றி மாறி காலை வைத்து "அற்புத
ளம்" புரிந்து வருவது கண்
ு ஒரு முறை பிரகாசமும் காம
ஜரும் கூடி சி. ஆர். கோஷ்டி
பக் கவிழ்ப்பதும், அடுத்த முறை
ஆர். கோஷ்டியும் காமராஜரும்
ட்டு வியாபாரம் துவக்கி பிரகா
காருவை வீழ்த்துவதும், மற்
ர் முறை பிரகாசம் - சி. ஆர்.
ோஷ்டிகளின் அச்சு காமராஜ்
ுவினருக்கு வேட்டு வைப்பதும்,
இந்த மூன்று திறத்தாருள்
ரேனும் இருவர் ஒன்று சேர்ந்து
ன்ருவது திறத்தாருக்கு குழி
ப்பதும் சென்னை மாகாண மக்
கண்டுகண்டு சலித்துப் போய்
ட நாடகம்.

ந்த நாடகம் — தேசியத் தம்பி
ின் இந்த பதவி வேட்டைப்
லம் — மூன்று கோஷ்டிகளின்
த ஓயாத குஸ்தி நாட்டு
ழக்கை என்ற தாமரைக்
த்திலே காணப்படும் துர் நாற்
தரும் சேறு. ஆண்டுக்கு
ன்று ஒரு கட்சியின் மந்திரிசபை
படி **ஏலம் போவது** அந்த காங்கி
கட்சிக்கு அல்ல, அத்தகைய
லைய தன்னிடத்திலே நடமாட
ம் நாட்டுக்கு அவமானம்; அத்த
ய பதவிப் பித்தர்களைப் பொது
க்கையிலே உலவ விட்ட மக்
கூட்டத்திற்குத் தீராத பழி.

மந்திரிசபை ஏலம் போகிறது என்று நாம் கூறக்கேட்டு கொதிப்புடன் கூவலாம் கதர் பக்தர்கள், "ஏடா சூனுமான நாக்கை அடக்கிப் பேசு, ஜாக்கிரதை!" என்று. ஆனல் அவர்கள் உள்ளத்தில் கொதிப்பு தோன்று முன்னமே உண்மையை உரைத்துவிட விரும்புகிருேம், இந்தக் கருத்து நம் சொந்தக் கருத்தல்ல; தேசிய ஏடு **பாரத தேவி** யிடமிருந்து நாம் பெற்ற இரவல்! கூறுகிறது **பாரத தேவி**:

"சென்னை சட்டசபை காங்கிரஸ் கட்சியின் தலைவர் தேர்தலை தேர்தல் என்று சொல்வதைவிட ஏலம் என்று சொல்லுவது அதிகப் பொருத்தமாயிருக்கும். வருஷா வருஷம் கள்ளுக் கடைகளின் குத்தகை ஏலம் போவது போல சென்னை மந்திரி சபையின் நிலைமையும் ஆகிவிட்டது. பதவி வகிக்கும் கட்சி தேர்தலில் தோற்றுப் போவதுண்டு, ஆனல் **ஒரே கட்சிக்குள்** இருக்கும் பல கோஷ்டிகள் ஒவ்வொரு வருஷமும் வெற்றி தோல்விக்கு கணக்குப் போட்டுக் கொண்டிருக்கும் வேடிக்கையை இங்குதான் பார்க்கமுடிகிறது."

இந்த வேடிக்கையின் விளைவு என்ன தெரியுமோ, அதையும் பாரததேவியே சொல்லக் கேளுங்கள்!

"காங்கிரஸ் கட்சி மெம்பர்கள் பதவிகளுக்காக ஒருவர் மேல் ஒருவர் பாயும் கேவலத்தைப் பார்த்து ஜனங்கள் வெறுப்படைந்து விட்டனர். எந்த மந்திரி சபையும் ஒரு வருஷத்திற்குத்தானு என்று கேட்கக்கூடிய அளவுக்கு சென்னை மாகாணத்தின் **காங்கிரஸ் அரசியல்** சந்தி சிரிக்கிறது."

ஆம்! மக்கள் மன்றத்தில் காங்கிரசுக்கு மதிப்பில்லை. தேசியவாதிகள் பதவிகளுக்காக ஒருவர் மீது ஒருவர் பாயும் கேவலத்தைக் கண்டு மக்கள் அவர்களை வெறுக்கின்றனர். அதுமட்டுமல்ல, காங்கிரஸ் என்றாலே சந்தி சிரிக்கிறது. 'பாரத தேவி'யாரே தம் கண்களில் நீர் பெருகப்பெருக உள்ளம் அலறித் துடித்துக் கூவு மளவுக்கு அவளுடைய பக்தர்களின் பதவி வேட்டை சந்தி சிரிக்கிறது.

என்ன காரணம் இதற்கு? ஏன் இப்படிப்பட்ட நிலை ஏற்பட்டது? யாரால் விளைந்தது இந்தச் சூது? தேவி கூறுகின்ருள்: "**சொந்த விருப்பு வெறுப்புகளும் நிரட்சர குட்சிகளின் ஆதிக்கமுந்தான் இம்மாகாண காங்கிரஸ் அரசியலுக்கு அடிப்படைகளாய் இருக்கின்றன. ஜனங்களின் நன்மையை விட தங்களுடைய நலன்கள் தான் பெரும்பாலான மெம்பர்களின் குறியாய் இருக்கிறது**"

காங்கிரஸ் எம். எல். ஏ.க்கள் சுயநல சொரூபிகளாய் விட்டனர். எனவேதான் இந்தச் சூது செய்ய முனைந்து விட்டனர். அவர்கள் உள்ளத்திலே பொதுநல உணர்ச்சி இல்லை. பிறருக்கு நன்மை செய்ய வேண்டுமே என்ற எண்ணம் துளியுமில்லை. சொந்த விருப்பு வெறுப்புகளையே சட்டமன்றத்தில் நடமாட விடுகின்றனர். அவர்களுடைய அரசியல் சந்தி சிரிப்பதற்குக் காரணம் இதுதான் என்கிருள் தேவி.

"இவ்வளவு கேவலமாக நடந்து கொண்டால் மக்கள் தம்மை மதிக்கமாட்டார்களே-அடுத்த பொதுத் தேர்தலில் தம்மைத் தேர்ந்தெடுக்க மாட்டார்களே—மற்ருேர் முறை எம். எல். ஏ. வாக முடியாதே! என்ற எண்ணம் கூடவா அவர்களுக்கு இராது? தங்கள் சொந்த எதிர்கால நன்மையை முன்னிட்டுக் கூடவா அவர்கள் தங்கள் கேவல நடத்தையை மட்டுப்படுத்த மாட்டார்கள் என்று எவரேனும் எண்ணக்கூடும். இந்த ஐயப்பாட்டிற்கும் பதில் கூறி இருக்கிருர்கள் "பாரத தேவி" யார், அழுத்தந் திருத்தமாக; ஆணித்திறமாக :—

"**இந்த அசெம்பிளியில் இருப்பவர்களில் பலர் அடுத்த தேர்தலில் செயின்ட் ஜார்ஜ் கோட்டைப் பக்கம் திரும்பிக்கூடப் பார்க்க முடியாது: ஆகவே கார்றுள்ள போதே தூற்றிக் கொண்டு போகின்றனர்.**"

இந்த விளக்கத்திற்குப் பிறகு காங்கிரஸ் எம். எல். ஏ.க்கள் ஏன் இப்படி நடந்து கொள்கிருர்கள் என்று எவரும் கேட்க முடியாது. அவர்கள் அடுத்த தேர்தலில் சட்டசபைக்குத் திரும்ப வருவது முடியாத செயல். எனவே அவர்கள்

காற்றுள்ள போதே தூற்றிக் கொள்கின்றனர்! காங்கிரஸ் மீது மக்களுக்கிருந்த பற்று தேய்ந்து விட்டது என்பதை அவர்கள் தெள்ளத் தெளிய உணர்ந்து கொண்டு விட்டார்கள். ஆகவே அவர்கள் எதிர்காலத்தைப் பற்றிய கவலையே அற்று — அவர்களுக்கு அரசியல் எதிர்காலமே கிடையாது—மனம் போன போக்கெல்லாம் போகின்றனர். சாகத் துணிந்தவனுக்கு சமுத்திரம் முழங்கால் தானே! தலைக்குமேல் போகிற வெள்ளம் சாண் போனால் என்ன, முழம் போனால் என்ன? பெயர் கெட்டது கெட்டது; இனி எவ்வளவு கெட்டால்தான் என்ன? எனவேதான் தேசீய எம். எல். ஏக்கள் எதற்கும் துணிந்து பதவி வேட்டையில் இறங்கி விட்டனர் என்று பாரத தேவி பகர்கிறது—அதற்கென்றே அமைந்துள்ள "அழகு" தமிழில்! நாம் சொல்ல நடுங்கும் நடையில்!

காங்கிரஸ் தலைவர் தேர்தலை சேறு என்றோம், அது அத்தன்மையதுதான் என்பதை விளக்க பாரததேவியாரின் 'காமிரா'வில் கண்ட சில காட்சிகளை நம் எழுத்து எனும் திரையிலே இட்டுக் காட்டினோம். இதோ மற்றொரு காட்சி—பாரத தேவியின் காமிரா காணாத காட்சி! அந்தக் காமிராவின் ஒளிப் பதிவுச் சக்திக்கு அப்பாற்பட்ட அரிய காட்சி!

"பாரத தேவி", சேற்றினை மட்டுமேதான் காண முடிந்தது. ஆனால், நாம் துவக்கத்திலேயே கூறியதுபோல, அந்தச் சேற்றிலே, ஒரு செந்தாமரை—அழகும் மணமும் கலைத்திறமும் நிறைந்த செந்தாமரை—காண்பார் உள்ளத்தில் எல்லாம் மகிழ்ச்சி அலைகளை மோதவிடும் ஓர் மோகனப் புன்னகை புரியும் செந்தாமரை முளைத்தது இந்த ஆண்டு. திராவிட இன எழுச்சி என்பதே அந்த வண்ணத் தாமரை!

ஆம்! பதவிப் பித்து என்ற சேற்றிலே இன எழுச்சி என்ற செந்தாமரை பிறந்தது, கனக விசயர் வாய்த்துடுக்கிலே ஓர் சிலப்பதிகாரம் பிறந்ததுபோல! பிரதமர் பதவிக்காக இப்படி முனைந்து நின்று போராடுவது துர் நாற்றத்தைத்தான் தந்தது, ஆனால் அந்த நாற்றத்திலே இவ் ஆண்டு தன்மானம் எனும் நறுமணம் கிளர்ந்தது. கோஷ்டிகளின் குஸ்தி என்ற நாடகத்திலே திராவிட உணர்ச்சி என்பானோர் சிறந்த நடிகன் கிடைத்தான். "சந்தி சிரிக்கும்" அந்த அரசியல் சிக்கலிலே, இந்நாள், திராவிட இனப் பற்று பிறந்தது. இது எத்துணை மகிழ்ச்சிக்குரிய சேதி! சேற்றிலே பிறந்தது என்பதற்காக எவரும் செந்தாமரையை வெறுத்திடமாட்டார். அதுபோல நாமும் பதவி வேட்டை என்ற காரணத்தால் பிறந்தது என்பதற்காக அந்த இன எழுச்சியை மறந்திடமாட்டோம். சேறு கூடாது—ஆனால் செந்தாமரை வேண்டும். காங்கிரஸ் எம். எல். ஏ. க்கள் காட்டிய பதவிப் பித்து கூடாது,—அந்த இன எழுச்சி வேண்டும்.

இந்த ஆண்டு காங்கிரஸ் கட்சித் தலைவர் தேர்தல் நடைபெற்ற நாளன்று, மாலை 4-30 மணிக்கு, பிரகாசம் குழுவினர், தேர்தல் மாளிகைக்குள் நுழைந்தபோது காங்கிரஸ் தோழர்கள் ஆரியம் ஒழிக பிராமணீயம் ஒழிக என முழங்கினராம். அடுத்து, 4-40 க்கு, நம் நண்பர் வைத்தியநாதய்யர் (மதுரை கருஞ்சட்டை மாநாட்டிலிருந்து அவர் நம் "நண்பர்" அல்லவா!) உள் நுழைந்தபோதும் அதே முழக்கங்கள் எழுந்தனவாம். தேர்தல் முடிவு அறிவிக்கப்பட்டு ஓமந்தூரார் வெளி யேறியதும், அவரை வரவேற்று, வாழ்க ரெட்டியார் என்று கூவிய கூட்டம், பிறகு, வைத்தியநாதய்யர் தங்கி இருந்த பக்கமாகச் சென்று, "வைத்தியநாதய்யர் வீழ்க! பிராமணர்கள் வீழ்க! அய்யர்கள் வீழ்க! துரோகி ஆர். வி. சாமிநாதன் வீழ்க!" என்று பெருங் குரலில் கூவிற்றும். ("இந்து" 27-3-48) எந்த இடத்திலே எப்படிப்பட்ட முழக்கம்! யாருடைய முகாமிலே எத்தகைய சுலோகம்! எவர் எண்ணியிருக்க முடியும் இத்தகைய இன உணர்ச்சி தேசீய வட்டாரத்தில் தோன்றுமென்று!

/அருவருக்கத் தக்க முறையில், பொது இடத்தில், பலர் முன்னிலையில், பிராமணர்கள் வீழ்க என்பது போன்ற சுலோகங்கள் கூறியதை நாம் கண்டிக்கிறோம்—பலமாகக் கண்டிக்கிறோம்—வைத்தியநாதய்யர்களையும் டாக்டர் சுப்பராயன்களையும் விட பலமாகக் க
டிக்கிறோம்—அது தவறு; பொ
வாழ்க்கையின் நெறி முறைக்
மாறு—ஆனால் அந்த கோஷ
ளுக்குப் பின்னால் இருந்ததே உ
ளம், திராவிட உள்ளம், இ
உணர்ச்சி படைத்த உள்ளம்,
யர் சூழ்ச்சியை தெள்ளத் தெ
உணர்ந்த உள்ளம், அந்த உ
ளத்தை நாம் கண்டிக்கமாட்டோ
போற்றுவோம். நம் கண்டன
சேற்றுக்கு! வாழ்த்து, அந்த சே
றிலே முளைத்துள்ள செந்த
ரைக்கு! சேறு இது செந்தாம
இது என்பதுகூட அறியா
இரண்டையுமே சேர்த்துக் க
டிக்கிறாரே டாக்டர் சுப்பராய
இன எழுச்சியே கூடாது என
றாரே, செந்தாமரைகூட வே
டாம் என்கிறாரே, அது தவ
கண்டனம் சேற்றின்மீது மட்
இருககவேண்டும் — செந்தாம
மீது பாயக்கூடாது.

இந்த ஆண்டு காங்கிரஸ் கட்
தலைவர் தேர்தல், ஆந்திராதமி
என்ற பிரச்சினை மீதோ வே
தனிப்பட்ட விருப்பு வெறுப்
ளின் மீதோ சுழலாமல் ஆரியரா
திராவிடரா என்ற அடிப்பன
கேள்வியின்மீது சுழன்றது கல
நாம் பெருமகிழ்ச்சி கொள்கிறோ
ஓமந்தூர் ரெட்டியார் பெற்ற
ஓட்டுகளில் 65 மட்டுமே தமி
டையவை என்பதையும் மிச்
தில் 35 ஓட்டுகள் ஆந்திரிடமி
தும் 12 ஓட்டுகள் கேரளர்கன்
ரிடமிருந்தும் அவர் பெற்றார்
பதையும் நாம் மனதில் இரு
கொண்டால் இந்த ஆண்டு பிர
தேர்தலில் 'ஆந்திரர்—தமிழர்'
சனை முக்கியமானதாக இ
வில்லை என்பது நன்கு தெரி
தமிழ்நாட்டு வைத்தியநாதய
ஆந்திர நாட்டு பிரகாசத்தை
மைச்சராகக் கொண்டுவர பெ
பாடுபட்டார் என்ற உண்மை,
லமைச்சர் தேர்தல் திராவிட-
போராட்டமாகவே முடிந்த
பதைத் திட்ட வட்டமாகக் கூ

"கட்சித் தலைவர் தேர்தல்
தற்போதுள்ள மந்திரி சபை
(ரெட்டியார் மந்திரி சபை
வகுப்பு வேற்றுமை வழிக
லேயே தனக்கு ஆதா
தேடிக் கொண்டது. இ

(10-ம் பக்கம் பாக்க

(1?-ம் பக்கத் தொடர்ச்சி)

...ர்வையைத் துடைத்துக்
...ண்டு, சாய்வு நாற்காலியில்
...ட்கார்ந்தான்.

"எங்கள் உடலில் தசையும்,
...த்தமும் இருக்கும் வரைக்
...ம் உழைக்கப் போகிறோம்!"
...வில் தோன்றிய தியாகியின்
...ருவம் அவன் அகக் கண்முன்
...று, பேசியது!

"...ும் உழைப்பீர்கள்! உறுதி
...ற்ற உத்தமர்களே, நீங்
... நிச்சயம் உழைப்பீர்கள்!
...ும் உங்களில் ஒருவனாக
...சப்படுகிறேன், தீர்மானிக்கி
...ன், என் இரத்தத்தைக்
...க்காகச் செலவழிப்பதை
..., ஏழை எளியவர்களின்
...லையைப் போக்க, கண்ணீ
...த் துடைக்க, வாழ்க்கையை
...த்த சிந்துவேன் இனி!
... தோழனின் தோளோடு
...ள் நின்று, ஏழை உழவர்
...ன் பக்கம் நின்று போராடு
...ன்! குன்றாத உணர்ச்சியும்
...யாத ஆர்வமும் பெற்று
...மையோடு உண்மை யென்
... பாதையில் சென்று, உயி
... உடலும் தனித்தனியாகப்
...ும் வரைக்கும் போராடு
...ன்!"—நீண்ட நேரம் சிந்தித்து
...படி ஒரு முடிவிற்கு வந்து
...டான் குமார்.

...மார் தன் முடிவைக் குமு
...யிடம் கூறி, விடை பெற்
... செல்ல வேண்டுமென்று
...ம்பி, இரவின் வருகைக்
...கி, துடிதுடிக்கும் உள்ளத்
...டு காத்துக் கொண்டிருக்
....

...ரவு! வெண்ணிலா குளிர்
...ாகத் தன் பால் ஒளியைத்
...ித்துக் கொண்டிருந்தது.
...யில் காதலர் மனமகிழ்ச்சி
... பேசிக்கொண்டிருந்தனர்.
...காதலர் யாது பேசுகின்ற
... எப்படிப் பேசுகின்றனர்?
... செய்கின்றனர்?" என்ற

இரகசியங்களை அறிய ஒற்றனைப் போல, மெதுவாக, அசைந்தசைந்து அங்கு வந்தான் தென்றல்.

"தென்றல் வீசுவது இப்பொழுதுதான் அத்தான், இனிமையாக யிருக்கிறது!"

"பொல்லாதவன் அவன்!"

"ஆமாம், தாங்களில்லாத நேரங்களில் கனலைக் கொண்டு வந்து மேலே கொட்டுகிறான்!" என்று கூறிக்கொண்டே அழகி, காதலனின் மார்பில் சாய்ந்தாள். சாய்ந்த இளவஞ்சியின் கன்னத்தை மெதுவாகத் தடவிக்கொடுத்துக் கொண்டே பேச ஆரம்பித்தான் குமார்.

"தென்றல் இப்பொழுது எங்கிருந்து, இங்கு, ஏன் வந்திருக்கிறான் தெரியுதா?"

"உங்களைப்போல நான் அவ்வளவு படிக்க வில்லையே, அத்தான்!"

"மலர்த் தோட்டத்திலிருந்து அவன் வருகிறான்."

"அங்கு என்ன வேலை! அவனுக்கு!"

'எனக்கு இங்கென்ன வேலை! அதே வேலைதான் அவனுக்கும் அங்கு!"

"ஏதேது அவனுக்கும், உங்களுக் கிருப்பதைப்போல......"

"எனக்கு நீ ஒரே ஒருவள் தான் காதலி! அவனுக்கோ பல காதலிகள்! தோட்டத்திலிருக்கும் மலர்ப் பெண்களின் மத்தியில் புரண்டுவிட்டு வந்திருக்கிறான்! அதனால்தான் அவன் உடலில் அவ்வளவு வாசனை வீசுகிறது!"

"ஆமாம் மிகவும் பொல்லாதவன்" என்றாள் குமுதினி புன்னகையோடு.

"பொல்லாதவன் மட்டுமல்ல, குறும்புக்காரனும்கூட அவன்! இதோ பாரேன், நம்மிடையே புகுந்து புகுந்து ஓடுகிறான்! அவனுக்கு நீதான் இடம் தருகிறாய்!"

"நானா?" இருவரும் கொல்லென்று சிரித்தார்கள். தென்றல் அவர்களிடையே புகுந்து செல்ல முயன்று முயன்று பார்த்தான்! அவன் முயற்சி தோல்வியில் முடிந்தது!

காதலர் களிப்புக் கடலில் நீண்ட நேரம் மூழ்கியிருந்தனர்! களிப்புக் கடலுக்கு மிக அருகே கண்ணீர்க் கடலிருப்பது அவர்களுக்குத் தெரியாது!

(தொடரும்)

அட்டைப் படம்

மறுபடியும் 'மந்திரி சபை பஸ்ஸைப் பிடித்துவிட்டார் ஓமாந்தூர். ஏமாந்தார் பிரகாசம். பிரகாசத்தை ஆதரித்து நின்ற வைத்தியநாதய்யர், வரதாச்சாரி போன்ற பிராமணோத்தமர்கள் மறுபடியும் திராவிடரே முதலமைச்சரா என்று ஏங்கி நிற்கின்றனர். என்றாலும் மந்திரி சபை பஸ், இவர்களின் அழுகுரலைப் பொருட்படுத்தாமல் ஓமாந்தூராரை ஏற்றிக்கொண்டு வேகமாக ஓடிக்கொண்டிருக்கிறது. ஏமாந்த பார்ப்பனீயமே, உனக்கு எம் மனமார்ந்த அனுதாபங்கள்!

மதி
படங்கள்
கலை
கதை
மொழி
அதிசயம்
அரசியல்
அறிவியல்
விஞ்ஞானம்
வளர் கதை
தொழில் முறை
பிறநாட்டுப் பத்திர் (?)
மொழி பெயர்ப்பு
இன்னும்...
ஆண்டு சந்தா
ரூ 2.
★
முன்பணம் கட்டக் கூடிய விற்பனையாளர்கள் தேவை.
மதி செயலகம்
287, தம்பு செட்டித்தெரு: சென்னை

சேற்றிலே முளைத்த செந்தாமரை

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

அடிப்படையில்தான் பலர் தங்கள் கருத்தை மாற்றிக் கொள்ளுமாறு செய்யப் பட்டார்கள். காங்கிரஸ் மந்திரி சபை வகுப்புத் துவேஷத்தைக் கிளப்பி இருப்பது மிகவும் வருந்தத்தக்கது"

இது "நண்பர்" வைத்தியநாதய்யர் தன் தோல்வியை முன்னிட்டு தனக்குத்தானே ஆறுதல் கூறி வெளியிட்டுள்ள அறிக்கையில் ஒரு துண்டு. **"ஓமந்தூரார் ஒரு திராவிடர்—அவரை ஆதரிக்க வேண்டியது திராவிட எம். எல். ஏக்கள் கடமை என்ற ஓரே காரணத்தைக் காட்டித்தான் ஓமந்தூராருக்கு ஆதரவு தேடப் பட்டது—பிரகாசம் ஓர் ஆரியர் என்ற காரணத்தால்தான் அவர் வீழ்த்தப் பட்டார்"** என்னும் உண்மையை இதைவிட நன்றாக யார்தான், எப்படி, விளக்க முடியும்? வேண்டுமானால், மற்றவர்கள், மந்திரி சபையில் வகுப்புத்துவேஷம் தோன்றி இருக்கிறது என்று வைத்தியநாதர் கூறிய வாசகத்தை திராவிட இன எழுச்சி தோன்றி இருக்கிறது என்று மாற்றி அமைக்கக்கூடும். ஆனால் அது தேவையில்லை. ஏனெனில் அந்த மாற்றம் இல்லாமலே எவரும் உண்மையை எளிதில் உணர்ந்து கொள்வர். வகுப்புத் துவேஷம் என்றாலே வைத்திய நாதர்கள் அகராதியிலே, திராவிடர் எழுச்சி என்று தானே பொருள்! அது யாருக்குத்தான் தெரியாது!

ஓமந்தூரார், அவர் முதலமைச்சராய் இருந்த ஓராண்டு காலத்தில், ஓரளவு இனப்பற்றுடன் நடந்து வந்தார். ஆரிய ஆணவத்தை, அங்கங்கே, கொஞ்சம் கொஞ்சம் மட்டந் தட்டிவந்தார். பார்ப்பனீய நச்சுமரத்தை தன்னால் இயன்றமட்டும் முறித்துத் தள்ளிவந்தார். இடை இடையே களைத்தார்; வீழ்ந்தார்; சலிப்புற்றார்; நம் மீதே பாய்ந்தார்; கருஞ்சட்டையைக கண்டுகூட கலங்கினார்; என்றாலும் மொத்தத்தில் வர்ணாசிரம வம்பர்களின் விபரீத நடத்தைக்குத் தக்க சவுக்கடி கொடுத்து வந்தார். அதே நேரத்தில் ஆரியம் ஓமந்தூரா இராமசாமியின் உருவத்தில் பெரியார் இராமசாமியின் சாயல் ஓரளவு இருக்கக் கண்டு திகைத்தது. திகைப்பு மருட்சியாயிற்று. மருட்சி மனப் பீதியாக மாறிற்று. பீதியில் சூழ்ச்சி பிறந்தது. சூழ்ச்சி ஓமந்தூராருக்கு குழி பறிக்க முனைந்தது. விளைவு — சட்டசபை காங்கிரஸில் தலைவர் தேர்தல்!

வைத்தியநாதர்களும் வரதாச்சாரிகளும் பாஷ்யம் அய்யங்கார்களும் பிரகாசம் பந்துலுகளும் கூட்டு முன்னணி அமைத்துக் கொண்டு "ஆர்ப்பாட்டப் போர்ப் பாட்டு" இசைக்கக் கண்ட காங்கிரஸ் திராவிடர் உட் பிணக்குகளை மறந்தனர்; ஐக்கிய முன்னணி அமைத்தனர்; ஆரியத்தை வீழ்த்தினர்; ஓமந்தூராரைக் காத்தனர்.

ஆரியம் பறித்த குழியில், ஆரியர்களே வீழ்ந்தனர்; திராவிடர் தப்பினர். வைத்தியநாதர்கள் தோற்றனர்; ஓமந்தூரார்கள் வென்றனர். சூழ்ச்சியும் சுரண்டலும் தொலைந்தன; நேர்மையும் நியாயமும் நிலைத்தன.

இந்தப் போராட்டத்திற்குப் பின்னணியில் பதவிவேட்டை ஒருபுறம் இருந்தது என்பதை நாம் மறைக்கவில்லை. அது சேறு. அந்தச் சேறு தொலைவதாக! அந்தச் சேற்றிலே முளைத்தது திராவிடரை, திராவிடர் போற்றல் வேண்டும் என்ற இன எழுச்சி—இந்தச் செந்தாமரை வளர்வதாக!

—

குயில்

[ஆசிரியர்: பாரதிதாசன். விலை 0-6-0. அலுவலகம்: பாரதிதாசன் பதிப்பகம், 95. பெருமாள் கோயில் தெரு, புதுச்சேரி.]

தென்றலிற் பிறக்கும் இன்ப
திற்கு, வாழ்த்து மிகை. யாழ்
தெறிக்கும் நல்லிசைக்கு
பாராட்டு, மிகை. பாரதிதாச
குயிலுக்கு மதிப்புரை மிகை.

மாதம்தோறும் ஒரு கவிதாமண்
டலத்தைத் திறந்து வைக்கி
"குயில்." அங்கே என்னென்
காட்சி! என்னென்ன இன்ப
எத்தனை எத்தனை புதுப்பொரு
கள்! அங்கே அரசியல் உண்டு! க
இயல் உண்டு! பொருள் இ
உண்டு! சமூக இயல் உண்
எல்லா இயல்களும் உண்டு. அங்
தமிழ் அரங்கில் உலவுவது தமிழ்
பெற்றபேறு. தமிழன் தமிழனா
பிறந்ததால் பெற்ற பேறு.

"குயில்", கவிதை இதழ். ம
புரைகள் உட்பட எல்லாம் கவி
வடிவிலேயே வெளி வருகின்ற
கவிதைகள் முழுவதும் பாரதி
னுடையன—அதாவது தேனி
பெருக்கு! கட்டிக் கரும்பி
இனிப்பு! தமிழகத்திற்கே
சிறப்பு இத்தகைய 'தேன் கூ
அதற்குக் கிடைத்திருப்பது.

இனிய தமிழே, எங்கள் மெ
யே கீதம் இனிய குயிலின் இசை
எமக்கு ஈந்ததிருவே, நீ வாழ்க

பாசறை ★ தமிழ்த் திங்கள் வெளியீடு

ஆசிரியர்: வே. நரசிம்மன்

ஏப்ரல் 15 ல் வெளிவரும் முதல் இதழில்!

பெரியார் ஈ. வெ. ரா, அறிஞர் அண்ணாதுரை, டாக்டர் சி. கே. குப்புசாமி, ஏ. பி. ஜனார்த்தனம், மா. இளஞ்செழியன், முத்தமிழ் மணி, இராதாமணாளன், வ. பா. தாமரைக் கண்ணி, ஆகியோர் எழுத்தோவியங்கள்!

விலை அணா 4. ஆண்டு சந்தா ரூ. 3

எல்லா ஊர்களிலும் முன்பணம் கட்டக்கூடிய ஏஜண்டுகள் உடனே தேவை.

பாசறை நிலையம்

6, குமரப்ப முதலி தெரு, சென்னை 1.

ஆம் பக்கத் தொடர்ச்சி)
ல் கண்டிப்பாக நான் நோட்
போடப்போகிறேன்.

:-ஐயோ பாவி ஜோசியரே!
அபாண்டமாகப் புளுகுகி
தங்கம் தினம் கோவிலுக்கு
ள், அவளுக்காகச் செல
பையன்கள் கோவிலுக்கு
ன்கள். அதிலே ரெண்டு
தம் 10, 20, என்று வரு
அதற்காக அவளைத் தினம்
க்கோவிலுக்கு வரச்சொல்
இது எல்லாக் கோவிலிலுந்
நடக்கிறது. ரங்கநாதன்,
ன், அண்ணாமலே, முதலிய
கோவில்களில் நடக்காததா,
கோவிலில் நடந்துவிட்டது?
ண்ண செட்டி வீட்டிற்குவரு
பற்றிப் பேசுகிறீரே; கட்
காரன் போக்குவரத்தில்லாத
ன் வீடு ஒன்று சொல்லும்
க்கலாம். அதனாலே கண்ட
ம் பேசுவதா? லாலா
ரு நான் ஏன் போகிறேன்?
க்கு இப்போது வியாபாரம்
அதற்காக அவன் மண்ட
கம் செய்கிறான். அதனால்
கோவிலுக்கு வருகிறான்.
யே தங்கத்தையும் பார்த்து
போவான். அதன் நிமித்தம்
கடைக்குப் போகிறேன்.
டெல்லாம் எவனோ அயோக்
ல் இப்படிக்கட்டிவிட்டான்
தை நம்புகிறீரே, இது
?

:-ஓய் அசட்டுப் பிராமணா!
லாம் உம்முடைய இளை
சொன்னதுங்காணும். நான்
வில்லை. பெரியண்ண
என்னிடம் நாள் பார்க்க
. நான் அவனுக்கு புது
அடிக்கிறதென்று ஒரு
சொல்லி, உண்மையா
சத்தியம் கேட்டேன்.
கொட்டிவிட்டான்.

பகவான்தான் இவர்களைக்
வேண்டும். அந்த ஆதிகேச
லி கொடுக்கவேண்டும்.

பகவான் என்ன? வெங்
என்னங்காணும்? நடக்கிற
துக்கு யாருக்குக் கூலி?
தான் கொடுக்கவேண்டும்'
படி ஆதிகேசவன் என்
ன தெரியுமா? ஆதியென்
ய என்று அர்த்தம்.
ன்றால் மயிர் என்று அர்த்தம். ஆதிகேசவனென்றால் பழைய மயிராண்டி என்று அர்த்தம், நாம் நம்ம தேவ (சமஸ்கிருத) பாஷையில் சொல்லுவதால் அந்த மடைப் பயல்கள் கேட்டுக்கொண்டு அந்தப் பழைய மயிராண்டிக்கும் ஒரு கும்பிடு போட்டு நமக்குக் காசைக் கொடுத்துவிட்டுப் போகிறார்கள். திராவிடன்களுக்கு மூளை ஏதுங்காணும்! அதுதான் அவாளை N. B. என்கிறோம். அவாள் நம்மை B. என்கிறார்கள், B. என்றால் என்ன தெரியுமோ? B. என்றால் Brain (பிரெயின்) பிரெயின் என்றால் அறிவு, N-B என்றால் No Brain அறிவில்லாதது. ஆகவே நாம் அறிவாளி. பிராமணா அல்லாதவா அறிவில்லாதவா. இது அவாளும் நாமும் சர்க்காரும் சேர்ந்து ராஜி மேலே ஏற்படுத்திக் கொண்டது.

அர்:-ஓய்! ஓய்! இதெல்லாம் இப்படிப் பேசாதிங்காணும்-எவனாவது கேட்டுண்டிருந்தா உதைக்கப் போறான்.

ஜோ:- ஆ...போங்காணும்! மூளை இல்லையென்றால் கோபம் வருமாங் காணும்? சூத்திரா, சூத்திரச்சிகள் என்பதற்கே கோபியாதவனுக்கு மூளை இல்லையென்றால் கோபம் வருமாங்காணும்! அவாளுக்கு படிப்பிருந்தால் அவாள் கோவிலுக்கு வருவாளா? வெளியிலே நின்று கும்பிட்டு நம்ம மேலே படாமல் ஒடுங்கி அடங்கிப் போவாளா? அது கிடக்கட்டும் அது வெகு நாளைய சங்கதி. நம்ப காரியம் பார்ப்போம். நீர் பெரியண்ண செட்டி கட்டளைக்காரன் சும்மா வந்துபோகிறான் என்றீரே, நீரும் சிகப்பு உம்ம ஆம்படையாளும் சிகப்பு, உம்ம குழந்தை கரிசட்டி மாதிரி அவனை உருக்கி வார்த்தாப்பலே யிருக்கு! அவன் குழந்தைகள் கூட இப்படியில்லையே! என்று பலபேர் பேசறா! (தனக்குள்ளவே பேசிக்கொள்கிறான்) அதெப்படி இருக்கும்? அவன் தினமும் உம்ம வீட்டிலேயே யிருந்தால் கதவில்லாத வீட்டில் நாய் நுழைவது இயற்கைதானே! இதையெல்லாம் உம்ம ஆதிகேசவம் கேட்டு என்ன செய்யமுடியும்?

அர்:-சரி! உமக்குக் கோடிநமஸ்காரம். இத்தாரும் 500 ரூபாய். இனி மீ 50 ரூபாய் தருகிறேன், இந்தப் பேச்சை இப்படியே விட்டுவிடும். இனி நாம் சகோதராள் போல் இருப்போம்.

ஜோ:-சரி! எல்லாம் மறந்துவிட்டேன், உண்மையிலேயே மறந்து போய்விட்டது, ஒரே ஒரு சங்கதி.

அர்:-அதென்ன இன்னமும் சொல்கிறீரே!

ஜோ:-உம்ம தங்கம்மாளை 2 நாளைக்கு....

அர்:-ஏங்காணும்! அவளோ தாசி. அவளுக்கு நாயகன் பணந்தான். பணம் கொடுத்தால் அவள் நீர் இருக்குமிடத்திற்குப் பார்த்துண்டு வருவள்.

ஜோ:-பணம் கொடுத்தால் அதற்கு நீர் என்னங்காணும்? உம்ம தயவில் அவள் வரணும் என்றுதானே உம்மைக் கேட்கிறேன்.

அர்:-நாளைக்கு வெள்ளிக்கிழமை, அவள் கோவிலுக்கு வருவள், நீரும் அங்குவந்து அவளை ஆசிர்வாதம் பண்ணுகிறமாதிரி பேசிவிட்டுப்போம். பிறகு அவளை உம்ம வீட்டுக்கு கிரகபலன் தெரிய வரச் சொல்லுகிறேன். மற்றச் சங்கதியும் ஜாடைமாடையாகச் சொல்லி அனுப்புகிறேன். அப்புறம் நீரே பார்த்துக்கொள்ளுமே. நீரோ பிராமணர். உம்ம உடல் அவள்மீது பட்டால் மோக்ஷம் என்று சாஸ்திரம் சொல்கிறது. அந்தச் சுலோகத்தையும்சொல்லியனுப்புகிறேன். நீரும் உனக்கு இனி தோஷம் இருக்கிறது—அதற்கு ஒரு வாரம் சனி பகவானுக்கு நெய் விளக்கு வைத்து, 2 நாளைக்காவது பிராமண சேவை செய்தால் கிரக தோஷம் தீரும் என்று சொல்லிவையும். அவள் என்னிடம் வந்து சொல்வாள். அதற்கு நீரே சரி என்று சொல்லிவிடுகிறேன். அப்புறம் உம்ம சங்கதி அவள் சங்கதி......

ஜோ:-ஏங்காணும்! அவள் தாசியாயிற்றே, மகாகெட்டிக்காரியாயிருப்பாளே. இதற்கெல்லாம் ஏமாந்துவிடுவாளா?

அர்:-போங்காணும் பைத்யமே, தாசி என்ன? அநேக பெரிய வீட்டுப் பெண்களுக்கு எல்லாம் இம்மாதிரி சொல்லி அவர்களும் அப்படியே நடந்து கிரகதோஷத்தைத் தீர்த்துக்கொள்கிறார்கள். நீராய் கூப்பிட்டாலும் முடியும் காணுய்ச்

(5-ம் பக்கம் பார்க்க)

தொடர்கதை:

ஐந்தாம் பகுதி

காதலர் பிரிவு

குமாரின் மனம், அன்று கண்ட கனவு, கோபாலின் கடிதம் இவை இரண்டையுமே சுற்றிச் சுற்றி வட்டமிட்ட வண்ணமிருந்தது.

"கலை என்ற வர்ணக் கண்ணுடியின் வழியாக உலகைப் பார்த்துக் கொண்டிருந்த எனக்கு, அன்று உண்மை உலகை உள்ளது உள்ளபடி கண்ட போது, வெட்கமும், கோபமும் சோகமும் பிடித்துக் கொண்டு வந்தன!"—கோபாலின் கடிதத்திலிருந்த இந்தச் சொற்கள் அவன் நினைவிற்கு வந்தன.

"கலை என்ற போர்வாள் கொண்டே, சமுதாயத்திலுள்ள வஞ்சகம், பொருமை, சுரண்டல், அநீதி ஆகியவற்றை வெட்டி வீழ்த்த முடியாதா?"

"முடியும்! காற்று எங்கும் பரவி, நிலைத்திருப்பது போல, ஏழை, எளியவன், பணக்காரன், பிடிவாதக்காரன், கருத்தில் கபோதி முதலிய அனைவரின் கண்களிலும் உன் கலை படவசதியிருந்தால், கலை, போர்வாளாகும்!"

"படும்படிச் செய்தால் போகிறது!"

"முடியாது! நாட்டில், மிக மிக கொஞ்சமானவர்களே கல்வியின் வாசனையை அறிந்தவர்கள். மற்றுமுள்ள பெரும்பான்மையோர், கல்வியின் பயனும் அறியார், கலையையும் ரசிக்கத் தெரியார்!"

"அப்படியானால் கலை இன்று சிறிதும் பயனளிக்காதா?"

"ஓரளவிற்குப் பயன் நிச்சயம் அளிக்கும். ஆனால் பொதுத் தொண்டில் நேரடியாகக்குதித்து, சொல்லெனும் கூர்வாள் கொண்டு, பணியாற்றுபவர்களால் எளிதில், மிக விரைவில் மாற்றத்தை உண்டாக்க முடியும்."

"இன்று சொல் வீரர் பலர் இருக்கிறார்களே!"

"ஆமாம், இருக்கிறார்கள்! பலர் சொல்லில் வீரர் ஆனால் உள்ளத்தில் கோழைகள்! கோழைகளாக இருந்தாலும் கெடுதியில்லை. பலர் நாவில் தேனும், நெஞ்சில் நஞ்சும் கொண்டவர்கள். இவர்களைவிட மோசமானவர்கள், ஆ... வர்கள், இரட்டை ... கொண்டவர்கள்! பொ... வில் இவர்கள் திட... வங்களை உண்டாக்கு... விஷப்பாம்புக் கூட்டம்... நாள் பெருகிக்கொண்டே... றது. போலிகள் கீழ்... கள் புரிந்தே, தலை தூ... கள், பிறகு காட்டுத்... செலுத்துகிறார்கள். ... உழைப்பாளிகள்—... கொண்ட சிங்க உள்ள... மனமுடைந்து மாள்... இன்றைய நிலைமை... கீழாக மாற்றும் சக்தி ... கிடையாது. குமார், ... பொறுப்புப் பெரியது. ... லைப்பார்! அவன் பெ... வத்தை நீயும் பெறு! அ... உள்ள போலிகளை—... கண்டாயே அவர்களை—... யடி! உண்மை உ... களுக்கு வணக்கம் ... அவர்களின் தோளோ... நின்று உழை! ஓடு! ... தோடு! பாட்டைத் ... கிழிந்த உடையும் ... ஏழையப்பர், அதோ, ... இருகையேந்தி அ... னர்! ஓடு! விரைந்தோடு!... படி குமாரின் உள்ளத்... பல எண்ணப் புயல்கள் ... போராட்டம் நீண்ட ... நடைபெற்றது! பொது... டில் புகவேண்டுமென்... ணம் பலப்பட்டுக் ... வந்தது. ஆனால் அவ... வில் ஒரு முடிவிற்கு ... வில்லை. அவன் உ... மனப்புயல் வீசிக்... இருந்தது.

அறையில்உலாவிக்... தீவிரமாக யோசிக்கத்... ஞன். அவன் முகத்தி...

(9-ம் பக்கம் பார்...

Edited, Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manim... at Free Printers 147, Coral Merchant St., Madras. Joint Editor, M. Ilancheliyan B A...